**Private & Confidential**

Date

Name
Address 1
Address 2
Postcode

அன்பு <<patient name>>

உங்கள் நோய் அறிகுறிகளை ஆய்வு செய்வதற்காக இன்று அவசரமாக உங்களை உங்களுடைய வைத்தியர் வைத்தியசாலைக்கு பரிந்துரைத்துள்ளார். காரணம் இது அவசரமானது. இரண்டு மணித்தியாலங்களுக்குள் நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுதல் வேண்டும். உங்களுடைய விசேட வைத்தியரைச் சந்திப்பதற்கு அல்லது நோய் அறிகுறிகளை கண்டறிவதற்கான பரிசோதனை அதாவது கேமரா பரிசோதனை போன்றவற்றுக்கானதொரு பிணி ஆய்வு அனுமதியாகும்

அனேகமான பொது நிபந்தனைகளினால் உங்களுடைய நோய் அறிகுறிகள் பாதிக்கப்பட்டிருக்கலாம், ஆனால், புற்றுநோய் உள்ளடங்கலாக எந்தவொன்றையும் தீவிரமாக நாங்கள் தவிர்க்க முடியாது என்பதை நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த வகையில் பரிந்துரைக்கப்படுகின்ற அனேகமானவர்கள் (10 பேர்களில் 9 பேர்களுக்கு மேல்) புற்று நோய் தொடர்பாக நோய் கண்டறியப்படுவது *இல்லை*. எனினும், நேர காலத்துடன் பரிசோதனை செய்து கொள்வது மிக முக்கியமாகும் எனவே, ஏதேனும் நோய் நிலைமைக்கு சிகிச்சை தேவையாயின், முடியுமான அளவு விரைவாக அதற்கு சிகிச்சையினை ஆரம்பிக்க முடியும்.

உங்கள் சந்திப்பு நேரத்தை ஏற்பாடு செய்வதற்காக அடுத்த சில நாட்களில் வைத்தியசாலையிலிருந்து உங்களுக்கு தகவல் கிடைக்கும். மருத்துவப் பரிசோதனைக்கு வைத்தியரிடம் பரிந்துரை செய்யப்பட்டதிலிருந்து 10 நாட்களுக்குள் உங்களுக்கு ஏதும் தகவல்கள் கிடைக்கவில்லையாயின் இக்கடிதம் தொடர்பில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்தின் ஊடாக உங்களுடைய பொது வைத்தியரின் செயலாளரை தொடர்பு கொள்க.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வைத்தியர் சந்திப்பிற்கு செல்வதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பது மிக முக்கியமாகும்.

உங்களுக்கு அறிகுறிகளை எது உண்டாக்குகிறது என்பதை புரிந்துகொள்வதற்காக வைத்திய நிபுனருக்கு உதவக்கூடிய சில பரிசோதனைகளை வைத்தியசாலையில் செய்ய வேண்டியுள்ளது. இந்த பரிசோதனைகள் பின்வருவனவைகளாக இருக்கலாம்:

- இரத்தப் பரிசோதனைகள்
- எக்ஸ்-கதிர் பரிசோதனைகள்
- ஸ்கேன்கள் (சிடி/எம்ஆர்ஐ)
- கேமரா பரிசோதனைகள்

உங்களுக்கு ஸ்கேன் அல்லது கேமரா பரிசோதனை தேவைப்பட்டால் உங்களுக்கு முன்கூட்டியே சொல்லப்படும், ஆகவே, தயவு செய்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். அதே நாளில் உங்களுக்கு முடிவுகள் தரப்படலாம். அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் விசேட நிபுனரினால் வழங்கப்படும்.

உங்களுடன் குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பரொருவரை கூட்டி வரலாம். உங்களுடன் மருத்துவ குழு என்ன விடயங்களை கலந்துரையாடியது என்பது பற்றி கேள்விகள் ஏதும் இருப்பின் இது உதவியாக இருக்கும். உங்கள் பரிந்துரைகள் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள் அல்லது கேள்விகள் இருப்பின் தயவு செய்து உங்கள் பொது வைத்தியரை தொடர்பு கொள்ளவும்.

அவசரப் பரிந்துரைகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து பிரவேசிக்கவும்:
http://www.cancerresearchuk.org/cancer-symptoms/what-is-an-urgent-referral

உங்களுடைய வைத்தியர் சந்திப்புக்கு காத்திருக்கும் போது, உங்களுடைய வழமையான செயற்பாடுகள்/பயிற்சியை தொடர்வதற்கு நீங்கள் முயற்சி செய்யுமாறு சிபாரிசு செய்யப்படுகின்றது. மேலதிக சிகிச்சைகள் தேவையாயின், புகைத்தலை நிறுத்துதல் மற்றும் செயற்பாட்டு மட்டங்களை மேம்படுத்தல் போன்ற உங்களுடைய உடல் வலிமை சேர்த்தல் உங்கள் சிகிச்சையின் ஒரு பகுதியாக இருக்கும்.

**<< GP>>**
**Surgery contact details**